**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 71/2020**

Deposition of Witness for Prosecution

Defence PW : 4

Court I Additional District Court, Tiruvallur.

Name : Tr. Ezhumalai

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the 12th day of August 2022.

**Date: 12.08.2022, S.C.No. 71/2020 PW : 4, Tr. Ezhumalai**

**முதல் விசாரணை...**

நான் தாங்கல்காலணி என்ற கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். இளவரசன் என்பவரை எனக்கு தெரியும். 2018ம் வருடம் ஒருநாள் நானும் இளவரசனும் பைக்கில் வேலைக்கு சென்று கொண்டிருந்தபோது பொதட்டூர்பேட்டை போலீஸார் சம்பவயிடத்திலிருந்து இரத்தம் படிந்த மண்ணையும், சாதாரணை மண்ணையும் எடுத்தார்கள். கிழக்கே தலை வைத்தும் மேற்கு பார்த்து கால்கள் இருந்த ஒரு பிரேதத்தில் கருப்பு நிற லோயரும், டீசர்ட்-ம் இருந்தது. நான் சம்பவயிடத்தில் நானும், இளவரசனும் கையொப்பம் போட்டோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் என் கையொப்பம் தான். அந்த கையொப்பம் அ.த.சா.ஆ.2. என்னிடம் காட்டப்படும் மகஜரில் உள்ள கையொப்பம் அ.த.சா.ஆ.3. போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை....**

காலை 8.00 மணிக்கு கிளம்பி 9.00 மணிக்கு வேலை செய்யும் இடத்திற்கு செல்வேன். இளவரசனும் என்னுடன் தான் வேலைக்கு வருவார். நான் எழுதிய பேப்பரில் தான் கையொப்பம் போட்டேன். ஏற்கனவே போலீஸார் எழுதி வைத்திருந்தார்கள். அதில் நான் கையொப்பம் போட்டேன். எனக்கு படிக்க தெரியாது. நான் கையெழுத்து போட்ட தாளில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. காவல் நிலையத்தில் நான் இரண்டு கையொப்பம் போட்டேன். நான் சம்பவிடத்தில் வைத்து கையொப்பம் போடவில்லை என்றும்

போலீஸாருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 71/2020**

Deposition of Witness for Prosecution

Defence PW : 5

Court I Additional District Court, Tiruvallur.

| | | |
|---|---|---|
| Name | : | Tr. Elavarasan |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the 12th day of August 2022.

**Date: 12.08.2022,    S.C.No. 71/2020      PW :  5,  Tr. Elavarasan**

**முதல் விசாரணை...**

நான் தாங்கல்காலணி என்ற கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். அ.சா.4ஐ எனக்கு தெரியும். 11.03.2018 அன்று பொதட்டூர்பேட்டை போலீஸார் சம்பவயிடத்தில் வைத்து போலீஸார் வரைபடம் வரைந்திருந்தார்கள். அந்த இடத்தில் பிரேதம் இருந்தது. இரத்தம் கலந்த மண்ணையும், சாதாரண மண்ணையும் போலீஸார் எடுத்தார்கள். போலீஸா ் என்னையும் அ.சா.4யும் விசாரித்தார்கள். அந்த பிரேதம் எங்கள் ஊரைச் சேர்ந்தவர். அவர் அணிந்திருந்த கருப்பு நிற லோயர் மற்றும் கருநீல டீசர்ட்-ஐ வைத்து எங்கள் ஊர் என்று அடையாளம் காட்டினோம. நானும் அ.சா.4ம் கையொப்பம் போட்டோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் என் கையொப்பம் தான். அந்த கையொப்பம் அ.த.சா.4. மகஜரில் உள்ள கையொப்பம் என் கையொப்பம் தான். அது அ.த.சா.ஆ.5. போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை...**

நான் கையொப்பம் போட்ட தினத்தில் நான் வேலைக்கு செல்லவில்லை. கரும்பு வெட்டும் வேலையாக அ.சா.4 உடன் நான் வண்டி ஓட்டிக்கொண்டு சென்றேன். தோட்டம் பார்ப்பதற்காக சம்பவயிடம் வழியாக சென்று கொண்டிருந்தோம். நான் பிரேதம் கிடந்த இடத்திற்கு சென்ற போது எத்தனை மணி என்று எனக்கு சரியாக தெரியாது. பிரேதத்தை பார்க்கும் போது 2.00 மணியிருக்குமா என்று கேட்டால்

மதியத்திற்கு மேல் இருக்கும். சுமார் 10, 20 அடி தூரத்திலிருந்து நான் பார்த்தேன். பிணம் அழுகிய நிலையில் இருந்தது. அவர் அணிந்திருந்த உடையை வைத்து அடையாளம் கண்டோம். இறந்தவர் எங்கள் ஊரைச் சேர்ந்தவர் என்பதாலும் அவர் கருநிற டி.சர்ட் அணிந்திருந்ததை பார்த்ததாலும் நான் அவரை அடையாளம் கண்டுகொண்டேன். அவர் குடியிருந்த அதே தெருவில் தான் நானும் குடியிருக்கிறேன். என்னுடைய வீடு அவர் வீட்டிலிருந்து 4 வீடு தள்ளி இருக்கிறது. 2 நாட்கள் கழித்து காவல் நிலையம் சென்றோம். காவல் நிலையத்தில் நான் எத்தனை கையெழுத்து போட்டேன் என்று கேட்டால் கையெழுத்து போட்டேன் சரியாக ஞாபகமில்லை. சம்பவயிடத்தில் நான் கையொப்பம் போடவில்லை என்றும் இறந்தவர் என் ஊர்காரர் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 71/2020**

Deposition of Witness for Prosecution

Defence PW : 6

Court I Additional District Court, Tiruvallur.

Name : Tr. Dhanasamy

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the 12th day of August 2022.

**Date: 12.08.2022, S.C.No. 71/2020 PW : 6, Tr. Dhanasamy**

**முதல் விசாரணை...**

நான் தாங்கல்காலணி என்ற கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். தனசேகரன் என் மகன் ஆவார். அவர் பாரஸ்ட் ரேன்ஜரிடம் டிரைவராக தற்காலிகமாக வேலை பார்த்தார். எனக்கு ஆந்திராவில் வனதுர்காபுரம் கிராமத்தில் 4½ ஏக்கர் நிலம் இருக்கிறது. எனக்கு டி.கே.டி. பட்டாவும் இருக்கிறது. அதில் தேக்கு மரம், மா மரம், சந்தன மரம் இருக்கிறது. மலையடி வாரங்களிலும் நிறைய மரம் இருக்கிறது. நான் அ.இ.அ.தி.மு.க-வில் ஊராட்சி செயலாளர் ஆவேன். முரளி என்பவர் எம்.எல்.ஏ. வீட்டிற்கு வருவார். அந்த வகையில் முரளி என்பவரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளில் யாரை தெரியும் என்று கேட்டால் முதலாவது நின்றுகொண்டிருந்த முரளி என்ற எதிரியை சாட்சி பக்கத்தில் சென்று அவரை தெரியும் என்று சாட்சியம் அளிக்கிறார். முரளி மற்றும் இருவர் சுமார் 3 வருடத்திற்கு முன்னர் ஒருநாள் பல்ஜிகண்டிகை என்ற இடத்தில் இருந்தார்கள். நான் பாலசமுத்திரம் மண்டல அலுவலகத்திலிருந்து வந்து கொண்டிருந்தேன். முரளி என்னிடம் மலையில் உள்ள சந்தன கட்டைகளை வெட்ட வேண்டும் அதற்கு உதவி செய்யுங்கள் என்று என்னிடம் கேட்டார். நான் முடியாது என்று சொல்லிவிட்டேன். உன் மகன் வனத்துறையில் வேலை செய்வதால் அவரிடம் சொல்லு என்று என்னிடம் கேட்டார். நான் முடியாது என்று சொல்லிவிட்டேன். அதனால் முரளி என்பவர் எனக்கு போன்மூலமும் உதவி கேட்டார். நான் முடியாது என்று சொல்லிவிட்டேன். ஒருநாள் இரவு நான் வீட்டில்

படுத்திருந்தேன். அப்போது என்னுடைய செல்போனுக்கு ஒரு அழைப்பு வந்தது. எனக்கு தெரியாமல் என் மகன் என் செல்போனை எடுத்து சென்றுவிட்டார். என் பையனை தேடினேன். என்னுடைய செல்போன் என்று எங்கே என்று கேட்டேன் என் மகன் வைத்திருப்பார் என்று சொன்னார். நான் என் செல்போனுக்கு போன் செய்து பார்த்தேன். ஸ்விட்ஆப் என்று வந்தது. அவரை தேடி பார்த்தோம் கிடைக்கவில்லை. மூன்றாவது நாள் பள்ளிப்பட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அவர்கள் என் மகன் தேடிக்கொண்டிருந்தார்கள். என் மகன் பெயர் தனசேகர். பொதட்டூர்பேட்டை வனத்துறைக்கு சேர்ந்த காட்டில் என் மகனை வெட்டி போட்டுவிட்டதாக சொன்னார்கள். திருத்தணி அரசு மருத்துவனையில் பிரேதம் இருப்பதாக போலீஸார் சொன்னார்கள். நான் சென்று பிரேதனை பரிசோதனை முடிந்த பின்னர் நான் பிரேதத்தை பார்த்தேன். இறந்தது என்னுடைய மகன் தான். எனக்கு ஒரே மகன். அந்த பிரேதத்தை என்னிடம் கொடுத்துவிட்டார்கள். போலீஸார் என்னை விசாரித்தார்கள். எதிரிகளை போலீஸார் அழைத்து விசாரித்தார்கள். என் மகன் எதிரிகளை போலீஸாரிடம் மாட்டிவிட பார்த்ததாகவும், செல்போனில் போட்டோ எடுத்ததாகவும் அதனால் என் மகனை எதிரிகள் வெட்டிவிட்டதாக சொன்னார்கள். என் மகனுக்கு 3 குழந்தைகள். அனைவரும் சிறு குழந்தைகள். அதில் 1 மகன், 2 மகள்கள். அந்த குழந்தைகளை நான் தான் பராமரித்து வருகிறேன். என் மருமகள் கூலி வேலை செய்கிறார். அவர் என் வீட்டில் தான் இருக்கிறார்.

**குறுக்கு விசாரணை...**

என் வீட்டிலிருந்து என் மகன் சென்றபோது அவரை கடைசியாக பார்த்தது என் மருமகள் மிடில்தா தான். அவர் தான் என் மகன் என்னுடைய செல்போனை எடுத்து சென்றதை பார்த்துள்ளார். என் மகன் எங்கே செல்கிறார் என்று என் மருமகள் என் மகனிடம் கேட்டாரா என்று எனக்கு தெரியாது. என் மகன் வெளியே சென்றபோது வெளிபக்கம் தாழ்பாள் போட்டு சென்றாரா என்று எனக்கு தெரியாது. என் மகன் வெளியே தாழ்பாள் போட்டு சென்றதாக என் மருமகள் தான் போலீஸார் விசாரிக்கும் போது சொன்னார். அந்த தாழ்பாள் யார் திறந்தார் என்று கேட்டால் அது என் மருமகளுக்கு தான் தெரியும். எனக்கு தெரியாது. வெளிப்பக்கம் தாழ்பாள் போட்டு சென்றால் என் மருமகள் என் மகனை பார்த்திருக்க வாய்ப்பு இல்லையா என்று கேட்டால் அது எனக்கு தெரியாது. என் மகன் என் மருமகளிடம் சண்டை போட்டுக்கொண்டு வெளிப்பக்கம் தாழ்பாள் போட்டு சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. என் மகனுக்கும், என் மருமகளுக்கும் சண்டையே வந்தது இல்லை. என்னுடைய செல்போனை என் மகன் எடுத்து சென்றுவிட்டார் அப்போது நான் தூங்கிகொண்டிருந்தேன். என்னுடைய செல்போன் எண் 94451 64650 ஆகும். அந்த எண்ணை தான் நான் தற்போது பயன்படுத்துகிறேன். அந்த எண்ணை நான் மீண்டும் நான் வாங்கினேன். அது எந்த கம்பெணி மொபைல் என்று கேட்டால் நான் 5ம் வகுப்பு வரை படித்திருப்பதால் அதன் கம்பெணி பெயர் தெரியாது. என் மகன் வெளியே

போன விவரம் எனக்கு காலை 7.00 மணிக்கு தெரியவந்தது. பொதுவாக வேலை விஷயமாக என் மகன் வெளியே சென்றார் 2, 3 நாட்கள் வீட்டிற்க வரமாட்டாரா என்று கேட்டால் அவ்விதம் வராமல் இருக்கமாட்டார். போன் செய்துவிடுவார். என் மகன் காணவில்லை என்று 3 நாட்கள் கழித்து ஏன் புகார் கொடுத்தேன் என்று கேட்டால் அவரை 3 நாட்களாக தேடிக் கொண்டிருந்தோம். உறவினர் வீட்டிற்கு சென்றிருப்பாரா என்று தேடிப்பார்த்ததால் புகார் கொடுக்க 3 நாட்கள் ஆகிவிட்டது. காலை 9.00 மணிக்கு புகார் கொடுத்ததாக ஞாபகம். அந்த புகாரை யார் எழுதினார்கள் என்றும் ஞாபகமில்லை. காவல் நிலையத்தில் வைத்து எழுதினார்கள். போன் எடுத்து சென்ற விவரத்தை போலீஸார் விசாரிக்கும் போதும் நான் சொன்னேன். யார் மேலேயாவது சந்தேகம் இருப்பதாக நான் புகாரில் சொல்லவில்லை. போலீஸார் எதிரிகளை திருவண்ணாமலை மற்றும் பெங்களூரில் கைது செய்ததாக சொன்னார்கள். அவர்கள் கைது செய்ததை நான் பார்க்கவில்லை. கைது செய்த அன்றே போலீஸார் பெங்களூரிலிருந்து தகவல் சொன்னார்கள். பெங்களூரில் எத்தனை பேரை போலீஸார் கைது செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. எதிரிகளை கைது செய்த பின்னர் போலீஸார் என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்கள். அதற்கு முன்னர் என்னை விசாரித்தார்கள் வாக்குமூலம் வாங்கவில்லை. எதிரிகள் தான் என் மகனை கொன்றதாக போலீஸார் சொன்ன பின்னர் தான் எனக்கு தெரியும். பிரேதம் கிடந்த இடத்திற்கு நான் செல்லவில்லை. என் மகன் என் வீட்டில் சண்டை போட்டுக் கொண்டு

வெளியே சென்றுவிட்டார் என்றும் அதனால் தான் உடனடியாக புகார் கொடுக்கவில்லை என்றும் தற்போது போலீஸாருக்காக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் எங்கள் வீட்டில் ஆட்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் வெளியே தாழ்பாள் போட்டுவிட்டு தான் செல்வோம் இல்லை என்றால் நாய் உள்ளே வந்துவிடும்.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 71/2020**

Deposition of Witness for Prosecution

Defence PW : 7

Court I Additional District Court, Tiruvallur.

Name : Tmt.. Medilda

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the 12th day of August 2022.

**Date: 12.08.2022,   S.C.No. 71/2020   PW : 7, Tmt. Medilda**

**முதல் விசாரணை...**

நான் தாங்கல்காலனியில் குடியிருந்து வருகிறேன். என் கணவர் பெயர் தனசேகர். அ.சா.6 தனசாமி என் மாமனார். என் கணவர் வனத்துறையில் ஓட்டுநராக வேலைக்கு சென்றுகொண்டிருந்தார். 01.03.2018 அன்று இரவு சுமார் 9, 9.30 மணிக்கு என்னுடைய மாமனாரின் செல்போனில் பேசிக்கொண்டே வெளியில் சென்றார். அவர் வெளியில் சென்றதை நான் பார்தேன். நான் குழந்தைகளை பார்த்துக்கொள்ள வேண்டியிருந்ததால் என் கணவர் வந்துவிடுவார் என்று இருந்துவிட்டேன். மறுநாள் என் கணவர் வீட்டிற்கு வரவில்லை. அவருடைய செல்போனை அவர் கைவசம் வைத்திருந்தார். என்னுடைய மாமனாரின் செல்போனையும் அவர் எடுத்து சென்றார். இரண்டு செல்போன்களும் ஸ்விட்ஆப் என்று வந்தது. தெரிந்த இடங்களில் எல்லாம் விசாரித்தோம். அவர் வந்துவிடுவார் என்று இரண்டு நாட்கள் காத்திருந்தோம். அவர் வீட்டிற்கு வராததால் பள்ளிப்பட்டு காவல் நிலையத்தில் நாங்கள் புகார் கொடுத்தோம். சுமார் 10 நாட்கள் கழித்து வாணிவிலாசபுரம் என்ற இடத்தில் ஒரு பிரேதம் கிடப்பதாக சொன்னார்கள். எங்கள் ஊரில் உள்ளவர்கள் பார்த்துவிட்டு அந்த பிரேதம் என் கணவர் தான் என்று சொன்னார்கள். நாங்கள் மறுநாள் திருத்தணி அரசு மருத்துவதனைக்கு சென்று என் கணவரின் பிரேதத்தை பார்த்தோம். அவர் வீட்டை விட்டு சென்றபோது நேவி புளு நிற டிசர்ட், கருப்பு நிற லோயரையும் அணிந்திருந்தார். என் கணவரை யாரோ கொலை செய்துவிட்டதாக கேள்விபட்டேன். யாரோ

செம்மரம் வேண்டும் என்று என் கணவரை மிரட்டியதாகவும் சொன்னார்கள். போலீஸார் என்னை விசாரித்தார்கள். போலீஸார் விசாரிக்கும் போது நான் நடந்ததை சொன்னேன்.

<u>குறுக்கு விசாரணை...</u>

நான் தொலைதூர கல்வியில் பி.ஏ வரை படித்துத்துள்ளேன். நான் தற்போது கே.வி. பாட்சாலா என்ற தனியார் பள்ளியில் 2ம் வகுப்பு ஆசிரியராக வேலை செய்கிறேன். அவர் வீட்டுக்குள் இருந்து வெளியே சென்றபோது நான் அவர் போனில் பேசிக்கொண்டு போனதை பார்த்தேன். என் குழந்தை வீட்டிற்குள் இருந்ததால் நான் உள்ளே சென்றுவிட்டேன். ஆகவே என் கணவர் தாழ்பாள் போட்டதை நான் பார்க்கவில்லை. தாழ்பாளை காலையில் யார் திறந்துவிட்டார்கள் என்று எனக்கு தெரியாது. என் அத்தை தான் சீக்கிரம் எழுந்திருப்பார். அவருக்கு தான் தெரியும். தாழ்பாள் பற்றி போலீஸார் விசாரிக்கும் போது நான் எதுவும் சொல்லவில்லை. என் கணவர், என்னுடனும், என் மாமனாருடனும் சண்டை போட்டுக்கொண்டு வீட்டின் வெளியே தாழ்பாள் போட்டு சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. என் மாமனார் காலையில் சத்தம் போட்டவுடன் எதிர் வீட்டுக்காரர் தாழ்பாளை திறந்துவிட்டார். என் கணவர் அடிக்கடி வீட்டை விட்டு சென்று இரண்டு நாட்கள் கழித்து வீட்டிற்கு வரும் பழக்கம் உண்டா என்றுகேட்டால் அவ்விதம் இல்லை. என் கணவர் இரவில் வெளியே தங்கமாட்டார். அவர் காணாமல் போய் 3 நாட்கள் கழித்து ஏன் புகார்கொடுத்தோம் என்று கேட்டால்

அவர் சிலசமயம் ஆக்டிங் டிரைவராக செல்வார். அவர் வெளியே சென்றால் அவரது அத்தை மகனுடன் வெளியே செல்வார். ஆகவே 3 நாட்கள் காத்திருந்தோம். மார்ச் 3ம் தேதி பள்ளிப்பட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். அப்போது பகல் சுமார் 10, 11 மணி இருக்கும். அந்த புகாரின் மீது போலீஸார் வழக்கு பதிவுசெய்தார்களா என்று எனக்கு தெரியாது. அந்த புகாரை என்னுடைய அண்ணன் எழுதினார். எனக்கு சரியாக தெரியாது. அந்த புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியும். அந்த புகாரில் என் கணவர் சென்றபோது எந்த நிற உடை அணிந்திருந்தார் என்று சொல்லியிருக்கிறோம். என் கணவர் போன் பேசிக்கொண்ட சென்றதை போலீஸார் விசாரிக்கும் போது சொன்னேன். போலீஸார் சொன்ன பின்னர் தான் என் கணவர் கொலை செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்று கேட்டால் அதற்கு முன்னரே ஊர் மக்கள் எங்களிடம் சொல்லிவிட்டார்கள். பிரேதம் கிடந்த இடத்திற்கு நான் செல்லவில்லை. பிரேத பரிசோதனைக்கு முன்னரே என் கணவரை நான் பார்த்தேன். அடையாளம் தெரியாத அளவிற்கு அழுகிய நிலையில் இருந்தது. என் கணவர் செல்போன் பேசிக்கொண்டே சென்றது என் மாமனார் சொல்லிதான் எனக்கு தெரியுமா என்று கேட்டால் என் மாமனாரில் செல்போன் அடித்துக் கொண்டிருந்தது அதை என் கணவர் எடுத்து பேசிக்கொண்டே வெளியே சென்றார். அதை நான் பார்த்தேன். அவர் யாருடன் பேசினார் என்று எனக்கு தெரியாது. என் மாமனாரை யாரோ மிரட்டுவதாக

சொல்லிக் கொண்டே வெளியே சென்றார். எனக்கும், என் மாமனாருக்கும், என் கணவருக்கும் இடையே பிரச்சனை இருந்தது என்றும் ஆகவே தான் என் கணவர் எங்களுடன் சண்டைபோட்டுக்கொண்டு வெளியே சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. போலீஸார் சொல்லிக்கொடுத்தபடி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 71/2020**

Deposition of Witness for Prosecution

Defence PW : 8

Court I Additional District Court, Tiruvallur.

| | | |
|---|---|---|
| Name | : | Tr. Jayapal |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the 12th day of August 2022.

**Date: 12.08.2022, S.C.No. 71/2020 PW : 8, Tr. Jayapal**

**முதல் விசாரணை...**

நான் தாங்கல்காலனியில் குடியிருந்து வருகிறேன். தனசேகர் என்பவரை எனக்கு தெரியும். அவர் வனத்துறையில் டிவைராக வேலை பார்த்தார். ராஜேஷ், சாரதி, ஏழுமுலை ஆகியோர்களை எனக்கு தெரியும். தனசேகர் என்பவர் இறந்துவிட்டார். 2018ல் இறந்தார். தேதி, மாதம் ஞாபகமில்லை. மலையடிவாரத்தில் ஒரு கால்வாய் பக்கத்தில் தனசேகர் என்பவரது பிரேதம் கிடந்தது. நானும் சென்று பார்த்தேன். பிரேதம் கிழக்கு பக்கம் தலை வைத்தும், மேற்கு பக்கம் கால் வைத்தும், குப்பர கிடந்தது. பொதட்டூர்பேட்டை போலீஸார் பிரேதத்தின் மீது விசாரணை செய்தார்கள். அவரை யாரோ அடித்து போட்டுவிட்டார்கள். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை...**

சம்பவயிடத்தில் நான் பிரேதத்தை பார்த்ததாக போலீஸார் சொல்லி கொடுத்து நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரேத்தை ஆம்புலன்ஸில் மருத்துமவனைக்கு எடுத்து சென்றார்கள். நானும், இன்னொருவரும் மருத்துமவனைக்கு சென்றோம். அவர் பெயர் சரத் ஆகும். பிரேதத்தை பிரேத பரிசோதனை முடித்து பின்னர் கொடுத்தார்கள்.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 71/2020**

Deposition of Witness for Prosecution

Defence PW : 9

Court I Additional District Court, Tiruvallur.

| | | |
|---|---|---|
| Name | : | Tr. Sarath |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the 12th day of August 2022.

**Date: 12.08.2022, S.C.No. 71/2020 PW : 9, Tr. Sarath**

**முதல் விசாரணை...**

நான் தாங்கல் காலணியில் குடியிருந்து வருகிறேன். அசா8 ஜெயபால் என்பவரை எனக்கு தெரியும். 11.03.2018 அன்று வாணிவிலாசபுரம் பட்டை கிருஷ்ணன் என்பவரது நிலததின் அருகே உள்ள கால்வாயில் ஒரு பிரேதம் இருந்தது. கிழக்கு பக்கம் தலையும், மேற்கு பக்கம் காலும் இருந்தது. அந்த பிரேதத்தில் கருநீல பனியனும், கருப்பு பேன்ட் இருந்தது. பொதட்டூர்பேட்டை போலீஸார் பிரேதத்தை மருத்துவமனைக்கு எடுத்து செல்லவேண்டும் என்று சொன்னார்கள். நானும், ஜெயபாலும் அந்த பிரேதத்துடன் திருத்தணி அரசு மருத்துமவனைக்கு சென்றோம். அது தனசேகர் என்பவரது பிரேதம் ஆகும். அவர் எங்கள் ஊரைச்சேர்ந்தவர். அவர் வனத்துறையில் டிரைவராக வேலை பார்த்தார். அவரை யாரோ வெட்டி போட்டதாக கேள்விபட்டோம். இரவில் ஏதோ போன் வந்ததாகவும் அவர் போனை எடுத்து சென்றதாகவும் போன் செய்தவர்கள் தனசேகரை வெட்டிபோட்டதாகவும கேள்விபட்டேன். என்ன காரணம் என்று எனக்கு தெரியாது.

**குறுக்கு விசாரணை...**

சுமார் 2, 3 அடி தூரத்திலிருந்து நான் பிரேதத்தை பார்த்தேன். அந்த வயல் பகுதியில் இருந்ததா அல்லது வனப்பகுதியில் இருந்ததா என்று கேட்டால் வயல் பகுதிக்கும் வனப்பகுதிக்கும் இடையில் இருந்தது. அந்த பிணம் குப்பர இருந்தது. அந்த பிணத்தின் மீது புல் போடப்பட்டு, கொஞ்ச மண் போடப்பட்டிருந்தது.

குப்பர இருந்ததால் அது ஆண் பிரேதமா என்று தெரியவில்லை. முதலில் பார்க்கும்போது அது ஆணா, பெண்ணா என்று தெரியவில்லை. அக்கம் பக்கம் பேசிக்கொண்டதிலிருந்து தனசேகரன் காணவில்லை என்று சொல்லியதிலிருந்து அது அவர் தான் முடிவு செய்தோம். நான் பிரேதம் கிடந்த இடத்திற்கு செல்லவில்லை என்றும் போலீஸார் சொல்லி கொடுத்தபடி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும் ஆம்பூலன்ஸில் சென்றதாக போலீஸ் விசாரிக்கும் போது சொன்னேன்.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.